[2012 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய கருத்துரு அனுப்பப்பட்டால், அந்தச் சாலையை அமைப்பதற்குத் தேவைப்படும் நிலத்தைவிட இரண்டு மடங்கு நிலத்தை அந்த உள்ளாட்சி மன்றம் வனத் துறைக்கு அளிப்பதற்கு முன்வந்தால், நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

தூர் வாருதல்

2748—திருமதி எஸ். கணிதா சம்பத்:***

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் ஏரியைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

பழமையான மதுராந்தகம் ஏரி தூர் வாரப்படுமா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியுள்ளார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொதுப் பணித் துறையினுடைய ஆய்வுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, "சில காரியங்கள் முடியாது" என்று செயலாளர் அவர்கள் சொன்னபோது, "பொதுப் பணித் துறையிலே முடியாது என்ற வார்த்தையை நீங்கள் உபயோகப்படுத்தக் கூடாது" என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி, மக்கள் நல அரசாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மதுராந்தகம் ஏரியைத் தூர் வாரும் கருத்துரு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லாவிட்டாலும், அது வருகின்ற நிதியாண்டிலே பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2012 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

திருமதி எஸ். கணிதா சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். என்னுடைய மதுராந்தகம் தொகுதியில் வாழும் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற மக்கள். அங்கு விவசாயம் செய்கின்ற நிலம் சுமார் 2,200 ஏக்கர் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், விவசாய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொண்டுபோகும் நம்முடைய அம்மா அவர்களின் அரசில், என் தொகுதி விவசாய மக்களின் நலனைக் கருதி இந்த ஏரியைத் தூர் வாரித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டில் இல்லையென்றாலும், அடுத்தாண்டில் செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய ஈரோடு (மேற்கு) தொகுதியிலும், ஈரோடு (கிழக்கு) தொகுதியிலும் இணைந்து வருகின்ற சூரம்பட்டிவலசு பகுதியிலே இருக்கின்ற அணைக்கட்டு கழிவுநீராலே சூழப்பட்டு, தூர் வாரி சீரமைக்கப்படவேண்டிய கட்டாயத்திலே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்து தர முன்வருவார்களா என்று கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணி இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கூற விரும்புகிறேன்.

[2012 ஏப்ரல் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் 9 பேர் பேச வேண்டிய சூழ்நிலை உள்ளது. 11–00 மணிக்குக் கேள்வி நேரத்தை முடிக்க வேண்டியிருப்பதால், இதே கேள்வி குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி ம. சக்தி, திரு. எம்.கே. அசோக், திரு. தா. மலரவன், முனைவர் கோவி. செழியன், திரு. ர.ம. பாபு முருகவேல், திரு. என். முருகுமாறன் ஆகியோர் தங்களுடைய தொகுதிகளில் ஏரியைத் தூர் வாருவது குறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள்.

வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

சுற்றுலாத் தலம்

***7668—திரு. கே.பி. நாகராஜன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதியில் உள்ள வீடூர் அணைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, வீடூர் அணையைச் சுற்றுலாத் தலமாகக் கருதி, ஏற்கெனவே அதன் மேம்பாட்டிற்காக மாநில அரசு நிதியுதவித் திட்டத்தின் அடிப்படையில், ரூபாய் 50 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீடு செய்து, அதிலே சுற்றுலாத் துறையின் பங்காக ரூபாய் 30 இலட்சம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டு, அங்கு நிலச் சீரமைப்புடன் பூங்கா அமைத்தல், அமரும் இருக்கைகள் அமைத்தல், குழந்தைகளுக்கான விளையாட்டுக் கருவிகள் அமைத்தல், பூங்காவில் மின் விளக்கு வசதி செய்தல், பூங்காவைச் சுற்றி வேலி அமைத்தல்